(ஆ) புதுக்கோட்டை காவேரி நூற்பாலையை தமிழ்நாடு டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷன் எடுத்துக்கொள்ள வேண்டுமென்பது.

திரு. ஜே. முகம்மதுகனி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் காவேரி நூற்பாலையை வருகிற 30-4-86 அன்று மூடப்போவதாகத் தெரிகிறது. காவேரி நூற்பாலையை தமிழ்நாடு டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷன் எடுத்து நடத்தி, அங்கே பணியாற்றுகின்ற ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு இந்த அரசு தொடர்ந்து வேலை கொடுக்கின்ற வாய்ப்பினை ஏற்படுத்தித் தருமா என்று அறிய விரும்புகிறேன். (பதில் இல்லை).

(இ) ஜனநாயக முன்னணி மாதர் சங்கக் கோரிக்கைகள்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, நேற்றைய தினம் ஜனநாயக முன்னணி மாதர் சங்கத்தைச் சேர்ந்த 250 க்கு மேற்பட்ட பெண்கள் தங்களுடைய கோரிக்கையை வைத்து இந்த அரசிடம் முறையிட கோட்டையை நோக்கி ஊர்வலமாக வந்தார்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பிரச்சினை பற்றி இன்று காலையில் என்னுடைய அறையிலே கேட்கப்பட்டு, அதற்கு அனுமதி மறுக்கப்பட்டு விட்டது. திரு. ஹேமச்சந்திரன் அவர்களும் கேட்டார்கள். அப்போது அவை முன்னவர் அவர்களும் இருந்தார்கள். இது மறுக்கப்பட்டு விட்டது. மீண்டும் இங்கே எழுப்ப வேண்டியதில்லை. வேண்டுமானால் போலீஸ் மானியக் கோரிக்கை வரும்போது பேசுங்கள். (குறுக்கீடு) ஒவ்வொரு இன்சிடன்டாக இங்கே பாயின்ட் ஆப் ஆர்டர் என்ற முறையில் தெரிவித்துக் கொண்டிருக்க முடியாது.

இன்றைக்கு காலையிலேயே நீங்கள் கேட்டீர்கள், திரு ஹேமச்சந்திரன் அவர்களும் கேட்டார்கள். அப்போது அவை முன்னவர் அவர்களும் என்னுடைய அறையிலேயே இருந்தார்கள். எனவே அப்போதே வேண்டாம் என்று சொல்லி மறுத்தாகிவிட்டது. (குறுக்கீடு) இது பற்றி மேலும் பேச வேண்டுமானால் என்னுடைய அறைக்கு வாருங்கள் பேசிக் கொள்ளலாம். நீங்கள் கேட்பது பாயின்ட் ஆப் ஆர்டரிலே வராது என்று அப்போதே சொல்லி விட்டேன். எனவே மீண்டும் அதை அவையிலே எழுப்ப மாட்டீர்கள் என்று எண்ணினேன். இப்போது நீங்கள் அதையே இங்கே எழுப்ப முயல்வது அவசியமில்லை.

ஈ. பேரவைத் தலைவருக்கு நீதி மன்றத்திலிருந்து வரும் சம்மன்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தின் தலைவர் அவர்களே, சபாநாயகர் என்ற முறையில் தாங்கள் சிறப்பாக அறிவீர்கள், சட்டசபையினுடைய ப்ரசீஜரை, சட்டசபையினுடைய ப்ரசீஜர்